பிரம்மோற்சவம்...

சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி கோயிலில் பிரம்மோற்சவத்தின் முதல் நாளான வெள்ளிக்கிழமை இரவு பின்ன மரம் வாகனத்தில் கிருஷ்ணர் கோலத்தில் அருள்பாலித்த பார்த்தசாரதி.

தமிழகத்தின் வளர்ச்சிக்கு வெளிமாநிலத்தவரும் பங்களிக்க வேண்டும்

ஆளுநர் ஆர்லேகர்

சென்னை, மே 1: தமிழகத்தின் வளர்ச்சிக்கு வெளிமாநிலத்தவரும் பங்களிக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் ஆர்.வி.ஆர்லேகர் தெரிவித்தார்.

சென்னை ஆளுநர் மாளிகையில் மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்கள் நிறுவன (மே 1) நாள் வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், தமிழகத்தில் வசிக்கும் இந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களை கௌரவித்து ஆளுநர் ஆர்லேகர் பேசியதாவது:

வெளி மாநிலங்களில் இருந்து குடியேற வந்தவர்களை அழைப்பது, கலந்துரையாடி கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்காக இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

பிறந்த இடம் வேறு; உழைக்கும் இடம் வேறு. இருப்பினும் தமிழகம் வெறும் வசிப்பிடம் மட்டுமல்ல; இது கர்ம பூமி. எனவே, வெளிமாநிலத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் தமிழகத்தின் வளர்ச்சிக்கு தீவிரமாகப் பங்களிக்க வேண்டும் என்றார் அவர்.

முன்னதாக ஆளுநரின் செயலர் ஆர். கிர்லோஷ் குமார் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் குஜராத் சமாஜத்தின் தலைவர் ஹித்தேஷ் எல்.தோஷி, மகாராஷ்டிர சங்கச் செயலாளர் தேவாஜி ராவ், மகாராஷ்டிர மண்டல தலைவர் சைலேஷ், ஓய்வு பெற்ற காவல் துறை தலைவர் பாஸ்கர் ராவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இரு மாநிலங்களின் பாடல், நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை பாரதியார் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் குஜராத்தில் பிறந்து சென்னையில் வாழும் 88 வயதான சாரதாபென் மன்சுக்லால் பாவ்ன் மற்றும் அவரது சகோதரியை கௌரவித்த தமிழக ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர். உடன், ஆளுநரின் செயலர் கிர்லோஷ் குமார் உள்ளிட்டோர்.

நீர்நிலை மீது கட்டப்பட்ட வணிக வளாகத்தை அகற்றக் கோரி வழக்கு

அரசு பதிலளிக்க உத்தரவு

சென்னை,மே 1: திருநீர்மலையில் அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ள குவாரி குட்டையை நிரப்பி கட்டப்பட்டுள்ள வணிக வளாகக் கட்டடங்கள், கழிப்பறைகளை அகற்றக் கோரிய வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருநீர்மலையைச் சேர்ந்த வழக்குரைஞர் ஓ.உதயகுமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், எங்கள் பகுதியில் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் குவாரி குட்டை ஒன்று உள்ளது.

தாம்பரம் மாநகராட்சி இந்தக் குட்டையை மண் உள்ளிட்ட கட்டட இடிபாடுகளைக் கொட்டி நிரப்பி 5 வணிக வளாகங்கள், பொது கழிப்பறைகளைக் கட்டியுள்ளது.

மழைக்காலங்களில் எங்களது பகுதியில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுக்க இந்தக் குவாரி குட்டை பெரும் உதவியாக இருக்கும்.

அந்த நீர்நிலையை நிரப்பி கட்டடம் கட்டியுள்ளதால் மக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலும், சுற்றுச்சூழல் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே, நீர்நிலையை நிரப்பிக் கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்கள், கழிப்பறைகளை அகற்ற அரசுக்கு உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், கே.சுரேந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த மனுவுக்கு தமிழக வருவாய்த் துறை மற்றும் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

வடபழனி முருகன் கோயில் பகுதியில் சாலை ஆக்கிரமிப்பால் பக்தர்கள் அவதி

வடபழனி முருகன் கோயில் நுழைவு வாயிலில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள்.

சென்னை, மே 1: சென்னை வடபழனி முருகன் கோயிலுக்குச் செல்லும் சாலையின் இருபுறமும் தள்ளுவண்டி கடைகள், வாகனங்கள் நிறுத்தப்படுவதால் சிரமம் ஏற்பட்டுள்ளதாக பக்தர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

சென்னை வடபழனி–ஆற்காடு சாலையில் இருந்து வடபழனி முருகன் கோயில் முகப்புக்குச் செல்லும் பிரதான சாலையாக ஆண்டவர் தெரு உள்ளது.

பொதுவாகவே, பிரதான கோயில்களுக்கு முகப்பில் பல்வேறு பூஜை சாமான் கடைகள், உணவகங்கள், தள்ளுவண்டி கடைகள் இருப்பது வழக்கம்.

அதேபோல், வடபழனி ஆண்டவர் தெருவிலும் இருபுறமும், நடைபாதையை ஆக்கிரமித்தும் பூ, மாலை, தேங்காய், பூஜை சாமான்கள் விற்பனை கடைகள் உள்ளன.

தற்போது கோடை காலம் என்பதால், புதிதாக ஏராளமான தற்காலிக பழச்சாறு தள்ளுவண்டி கடைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பக்தர் வரும் கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் சாலைகளின் இருபுறமும் ஆங்காங்கே நிறுத்தப்படுகின்றன.

இதனால், விசேஷ நாள்களில் பக்தர்கள் அதிக அளவில் கூடும் போது கோயில் நுழைவு வாயிலுக்குச் செல்ல மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

எனவே, பக்தர்கள் எளிதாக கோயிலுக்குச் சென்றுவரவும், ஆக்கிரமிப்புகளுக்கு தீர்வு காணவும் சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

13 இடங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில்

சென்னை, மே 1: தமிழகத்தின் 13 இடங்களில் வெப்பநிலை 100 டிகிரி ஃபாரன்ஹீட்டை தாண்டி பதிவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தெற்கு ஒடிஸா முதல் மன்னார் வளைகுடா வரை, தெலங்கானா, ஆந்திர பிரதேசம், தமிழகம் வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், சனிக்கிழமை (மே 1) முதல் மே 7–ஆம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் சனிக்கிழமை (மே 2) பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழையும், ஞாயிற்றுக்கிழமை (மே 3) நீலகிரி, கோவை மலை பகுதிகள், திருப்பூர் மலை பகுதிகள், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழையும் பெய்யக்கூடும்.

மேலும், திங்கள்கிழமை (மே 4) நீலகிரி, கோவை மலை பகுதிகள், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்யக்கூடும் என்பதால், மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சனிக்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகள், அதையொட்டிய மத்திய மேற்கு வங்கக் கடலில் சனிக்கிழமை சூறாவளிக் காற்று மணிக்கு 65 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.

வெப்பநிலை: தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை மே 5 வரை சற்று அதிகமாக இருக்கும். வெள்ளிக்கிழமை அதிகபட்சமாக வேலூரில் 107.6 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது. திருச்சி–104.18, சென்னை மீனம்பாக்கம், மதுரை விமான நிலையம்– 104, திருப்பத்தூர், மதுரை நகரம்–103.28, தருமபுரி–102.56, ஈரோடு–102.2, பரமத்திவேலூர்–101.84, திருத்தணி–101.48, நாகப்பட்டினம்–101.3, பாளையங்கோட்டை, புதுச்சேரி–100.4 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை பதிவானது.

மழை அளவு: தமிழகத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, காக்காச்சி உள்ளிட்ட பகுதிகளில் 70 மி.மீ. மழை பதிவானது. பழனி (திண்டுக்கல்)– 50 மி.மீ., மாஞ்சோலை (திருநெல்வேலி), வூட் பிரையர் எஸ்டேட் (நீலகிரி), மொடக்குறிச்சி (ஈரோடு), பழனி (திண்டுக்கல்), செருமுள்ளி (நீலகிரி), அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி)– 40 மி.மீ., ஆண்டிபட்டி (தேனி), சோளிங்கர் (ராணிப்பேட்டை), ஆர்.கே.பேட்டை (திருவள்ளூர்), ஊத்துக்குளி (திருப்பூர்), மூலனூர் (திருப்பூர்), மின்னல் (ராணிப்பேட்டை), அரண்மனைப்புதூர் (தேனி), வட்டமலை நீர்த்தேக்கம் (திருப்பூர்), மேட்டுப்பாளையம் (கோவை), பில்லூர் அணை மேட்டுப்பாளையம் (கோவை), பேச்சிப்பாறை (கன்னியாகுமரி), ஆனைப்பாளையம் (கரூர்), கேலவரப்பள்ளி அணை (கிருஷ்ணகிரி)–30 மி.மீ. மழை பதிவானது.

‘மனித வளத்தை அகற்ற முடியாத துறைகளில் கவனம் தேவை’

சென்னை, மே 1: மனித வளத்தை முழுமையாக அகற்றிவிட முடியாத துறைகளில் ஐஐடிகள், தொழில் கல்வி பயிற்சி நிறுவனங்கள் மிக நெருக்கமாக இணைந்து செயல்பட வேண்டும் என மத்திய அரசின் முதன்மை பொருளாதார ஆலோசகர் (சிஇஏ) டாக்டர் வி.அனந்த நாகேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை ஐஐடி–இன் 67–ஆவது நிறுவன நாள் விழா வியாழக்கிழமை நடைபெற்றது. விழாவில் பங்கேற்று ஐஐடி–இன் 2026–ஆம் ஆண்டுக்கான சிறந்த முன்னாள் மாணவர்களுக்கு விருதுகளை வழங்கி அனந்த நாகேஸ்வரன் பேசியதாவது:

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடுத்த 6 ஆண்டுகளில் 7.8 டிரில்லியன் மற்றும் சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவில் 30 டிரில்லியன் என்ற இலக்கைக் கொண்டுள்ளது. இதற்கு டாலர் மதிப்பில் 12 சதவீத வளர்ச்சி தேவை.

முன்னோடித் திட்டங்கள், காப்புரிமை நோக்கத்தில் இருந்து விலகி, வேளாண்மை, உற்பத்தி, சேவைகள், நிர்வாகம் ஆகிய துறைகளில் உற்பத்தித் திறன் மேம்பாடுகளை நோக்கிச் செல்ல வேண்டும்.

சென்னை ஐஐடி நிறுவனத்தின் 67–ஆவது நிறுவன நாள் விழாவில் புகழ்பெற்ற முன்னாள் மாணவர் விருதுகளை வழங்கிய மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.ஆனந்த நாகேஸ்வரன். உடன், ஐஐடி இயக்குநர் வி. காமகோடி.

ஆராய்ச்சி மேம்பாட்டுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியா 0.65 சதவீதத்தைச் செலவிடுகிறது. கொரியா (4.93 %), அமெரிக்கா (3.46 %), ஜெர்மனி (3.13 %), சீனா (2.43 %) போன்ற நாடுகள் அதிக சதவீதங்களைச் செலவிடுகின்றன.

இதேபோல கல்வி நிறுவனங்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் இடையே உள்ள இடைவெளியையும் குறைக்க வேண்டும்.

இதன்மூலம் மாணவர்களைத் தயார்படுத்தி வேலைவாய்ப்புகளுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். ஏஐ மூலம் மனித வளங்களை அகற்றாத துறைகளிலும் கல்வி அமைப்புகள் கவனம் செலுத்த வேண்டும்.

இதற்கு ஐஐடி–கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள் இணைந்து செயல்பட வேண்டும். உற்பத்தி, பொறியியல் திறன்களை வழங்கும் மையங்களாக இது மாறும் என்றார் அவர்.

முன்னதாக ஐஐடி இயக்குநர் வி.காமகோடி தலைமை உரையாற்றினார்.

சேர்க்கை அறிவிப்பு

பொது நுழைவுத் தேர்வு-2026
பின்வருவனற்றில் சேர்வதற்கானது

கல்வி நிலையம்	படிப்புகள்
Pandit Deendayal Upadhyaya National Institute for Persons with Physical Disabilities (Divyangjan) (PDUNIPPD) **பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா மாற்று திறனாளியர் (திவ்யாங்ஜன்) தேசிய நிறுவனம் (திவ்யாங்ஜன்) (PDUNIPPD)** 4, விஷ்ணு திகம்பர் மார்க், புது தில்லி - 110002 இணையத்தளம்: https://pdunippd.nic.in மின்னஞ்சல்: cetpdunippd2026@gmail.com	• BPT • BOT • BPO
Swami Vivekanand National Institute of Rehabilitation Training and Research (DIVYANGJAN), Cuttack (SVNIRTAR) **சுவாமி விவேகானந்தர் மறுவாழ்வுப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக்கான (திவ்யாங்ஜன்) தேசிய நிறுவனம், கட்டாக் (SVNIRTAR)** ஓலத்பூர், அஞ்சல் - பைரோய், கட்டாக், ஒடிசா - 754010 இணையதளம்: https://svnirtar.aic.in, மின்னஞ்சல்: nirtar@nic.in	• BPT • BOT • BPO • BASLP
National Institute for Locomotor Disabilities (DIVYANGJAN), Kolkata (NILD) **இயக்கக் குறைபாடுடையோருக்கான (திவ்யாங்ஜன்),தேசிய நிறுவனம் கொல்கத்தா (NILD)** B.T. சாலை, பன்ஹூக்ளி, கொல்கத்தா - 700090 இணையதளம்: https://nild.nic.in, மின்னஞ்சல்: nild@nic.in	• BPT • BOT • BPO • BASLP
National Institute for Empowerment of Persons with Multiple Disabilities (DIVYANGJAN), Chennai (NIEPMD) **பன்முகக் குறைபாடுடையோர் (திவ்யாங்ஜன்), அதிகாரமளித்தல் தேசிய நிறுவனம் சென்னை (NIEPMD)** கிழக்குக் கடற்கரைச் சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல், சென்னை-603112, இணையதளம்: www.niepmd.tn.nic.in மின்னஞ்சல்: niepmd@gmail.com	• BPT • BOT • BASLP
Ali Yavar Jung National Institute of Speech & Hearing Disabilities (Divyangjan), Mumbai (AYJNISHD(D) **அலி யாவர் ஜங் தேசிய பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடுடையோர் (திவ்யாங்ஜன்), நிறுவனம் மும்பை (AYJNISHD(D))** K.C. மார்க், பாந்த்ரா (மேற்கு) ரிக்ளமேஷன், மும்பை - 400 050 இணையதளம்: http://ayjnishd.nic.in, மின்னஞ்சல்: ayjnishh-mum@nic.in	• BASLP
Composite Regional Centre, Secundrabad **ஒருங்கிணைந்த பிராந்திய மையம், செகந்தராபாத்** மனோவிகாஸ் நகர், போவென்பள்ளி, செகந்திராபாத், தெலங்கானா - 500009	• BASLP
Composite Regional Centre for Skill Development, Rehabilitation & Empowerment of Persons with Disabilities, (DIVYANGJAN), **மாற்றுத்திறனாளிகளின் (திவ்யாங்ஜன்) திறன் மேம்பாடு, மறுவாழ்வு மற்றும் அதிகாரமளித்தலுக்கான ஒருங்கிணைந்த பிராந்திய மையம்** குவஹாட்டி (CRCSRE), குவஹாட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகம், அஞ்சல் அலுவலகம்: இந்திராபூர், GMC மருத்துவமனை சாலை, பாங்காநகரா, குவஹாட்டி அஸ்ஸாம்-781032. இணையதளம்:crcguwahati.nic.in	• BASLP
Composite Regional Centre, Patna **ஒருங்கிணைந்த பிராந்திய மையம், பாட்னா.** ஷேக்ஸ்புரா (பழைய தர்மசாலா), செவிலியர் கல்லூரி அருகில், பாட்னா - 800014. இணையதளம்: https://crcpatna.nic.in, மின்னஞ்சல்: crcpatna@rediffmail.com	• BPO

தகவல் கையேடு மற்றும் விண்ணப்பப் படிவம் இணையத்தில் வெளியிடப்படும் தொடக்க நாள்
விண்ணப்பப் படிவங்களை இணையம் வழியாகப் பெறும் இறுதி நாள்
நுழைவுத் தேர்வு நடைபெறும் நாள்

விவரங்களுக்கு pdunippd.nic.in என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்

சம்பந்தப்பட்ட அனைவரும் தயவுசெய்து கவனிக்கவும்

CBC 38103/12/0001/2627

இயக்குநர்,
PDUNIPPD, புது தில்லி

SMART Ads

திருவள்ளூர் அடுத்த ஏகாட்டூர்
இரயில் நிலையம் 100 மீட்டர் அருகில்
மிக குறைந்த விலையில் வீட்டு மனைகள்
சதுரடி விலை ரூ.1800/-
FREE REGISTRATION
உடனே வீடு கட்டி குடியேறலாம்...
KASHI PROMOTERS
93848 54567 / 68
லேஅவுட் போட்ட இடம் தேவை
மனைகள் விற்க ஏஜெண்ட்டுகள் தேவை

SMART Ads
Every week
Friday, Saturday & Sunday
in
Main Issue
THE NEW INDIAN EXPRESS & தினமணி
Deadline : Every Wednesday
For enquiry contact:
98844 15405

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்
எண்.72, மே ஃபிளவர் 'E' கேலில், டாக்டர் பாலகந்தரம் ரோடு, அவினாசி ரோடு அடுத்து, ATT காலனி, கோயம்புத்தூர்–641 018.
இணையதளம் : www.idbi.bank.in, CIN:L65190MH2004GOI148838

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 9(1) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு.

ஐடிபிஐ வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **ரூ.65,68,478/– (30.04.2026 தேதி அன்று)** தொகையை **திருமதி.ரத்னா தேவி.S மற்றும் திரு.மணிபாரதி.S,** என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட, **கொள்நிலை சுவாதீனம் (Physical Possession)** செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை, **25.05.2026** தேதியில் **(காலை 10.30 முதல் 11.30 மணி வரை)** விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு'** என்ற அடிப்படையில் விற்கப்படும். குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.62,00,000/–** மற்றும் முன்வைப்புத் தொகை : **ரூ.6,20,000/–.**

அசையாச் சொத்து விபரம்

கோயம்புத்தூர் மாவட்டம் – 641 041, கோயம்புத்தூர் வடக்கு தாலூகா, எண்.4, வீரபாண்டி கிராமத்தில் சர்வே எண்.312/2A3, "ஸ்ரீ ராம் கார்டன்ஸ்" ல் அமைந்த மனை எண்.A15 வடகிழக்குப் பகுதி, A16 கிழக்குப் பகுதியில் 1578 சதுர அடி (1350 சதுர அடி கட்டப்பட்ட பகுதி) விஸ்தீரண நிலமாகிய குடியிருப்புச் சொத்து திரு.S.மணிபாரதி பெயரில் உள்ளது.

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **www.baanknet.com** மற்றும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் **www.idbi.bank.in** இணையதளத்தில் பார்வையிடலாம்.

தேதி : 30.04.2026
இடம் : கோயம்புத்தூர்

ஓம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி